முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விகாரி சித்திரை மாதம் 15ம் திகதி முதல் விகாரி சித்திரை மாதம் 22ம் திகதி வரை ஏப்ரல் 28ம் திகதி முதல் மே 05ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **தரும பலம் கொண்ட தமிழகமே**
**தாயகமாக உள்ள பாரதமே**
**பெருமைபட இந்தியா தமிழகத்தில்**
**புகலுவேன் விகாரி தகர் திங்களில்**

**2.** **திங்களில் மூவை திகதி மேல் இருபானீர் திகதி வரை**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 15ம் நாள் 28.04.2019, ஞாயிறு முதல் சித்திரை மாதம் 22ம் நாள் 05.05.2019, ஞாயிறு முடிய)**
**தேசமதில் வார நிகழ்வாக எதிர்கால பலனை**
**இங்கனமே சுப்பிரமணியர் யானும்**
**இயம்பிடுவேன் வார ஆசியாக**

**3.** **ஆகவே கலியுகம் தன்னில்**
**அரசியலில் தேர்தல் களம் கண்ட**
**வகுப்புவாத அமைப்புகள் எல்லாம்**
**வலுவிழந்து காணப்பட நேரும்**

**4.** **நேருமையிலா வாக்கு வாத நிலை**
**நிலமதனில் பகை கலவரம் ஆகும்**
**மாறுதலை செய்யும் அரசோ**
**மக்களை பாதுகாக்கா தவிக்கும்**

**5.** **தவிக்கவிடும் தேசிய செயல்முறைகள்**
**தமிழகத்தில் மேலும் நெருக்கடி காணும்**
**புவிதனில் மக்களும் வாக்குரிமை**
**புனிதம் நடந்து தெளிவு பெறுவர்**

**6.** **தெளிவுபட நலத்திட்டங்களென**
**தேவைக்கு ஏற்பவே வராத தடைகள்**
**இழிவென எதிர்க்கும் வண்ணம்**
**எங்கும் அறிவு முதிர்ச்சி காணும்**

7. காணவே வளர்ச்சிகான பணிகள்
கட்டாயம் நடக்காவிடில்
ஞானமுள்ளவர்கள் வழியிலினி
நலம் கருதி கேட்கவும் போராடவுமான நிலை கூடும்

8. கூடவே இனியும் ஆளுமையில்
குறைபாடு கண்டிட நேர்ந்தால்
ஈடேறா தன் நிலைகுலைந்து
இடர்களும் பின்னடைவும் காணும்

9. காணவே அடிப்படை கொள்கை
கண்ணியமான செயல்பாடு மறந்து
ஞானமிலா அரசியல் நடத்துபவர்கள்
நம்பகமிழந்து முடங்கிடவே நேரும்

10. நேருமைபட அன்னதனால் இனி
நிர்வாகம் ஆளுமை கொண்டவர்கள்
தருமவழிக்கு வந்து அரங்க ஞானி
தரணி காக்க காட்டும் ஆன்மீக அரசியல்

11. அரசியல் ஞானவழி ஏற்றிட
அடித்தட்டு மக்களையும் காக்கும்
அரசியல் நடத்தவே இந்தியா தமிழகம்
ஆளுமையில் சிறந்து முதன்மை பெறும் வார ஆசி முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விகாரி வருடம் சித்திரை மாதம் 15ம் நாள் 28.04.2019, ஞாயிறு முதல் விகாரி சித்திரை மாதம் 22ம் நாள் 05.05.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தருமபலம் மிகுந்த தமிழகமே தாய் நாடாய் உள்ள பாரத தேசமே இந்த தேசத்தினிலே விகாரி வருடம் சித்திரை 15ம் நாள் 28.04.2019, ஞாயிறு முதல் சித்திரை 22ம் நாள் 05.05.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் தமிழகத்திலும் தாய் நாடான இந்தியாவிலும் நடக்கவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

கலியுகத்தினில் இந்த காலச் சூழ்நிலையில் அரசியலில் தேர்தல் களம் கண்ட வகுப்புவாத அமைப்புகள் எல்லாம் இனி வலுவிழந்து காணப்பட நேரிடுமப்பா. நேர்மையற்ற முறையிலே அரசியல் கட்சிகளுக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டாகி அது பாரததேசத்தினில் பகையும் கலவரமும் உண்டாகும் நிலை வரக்கூடும். மக்களிடத்தும் சாதி, மத, இன பிரச்சனைகள் ஆங்காங்கே உண்டாகும். மாற்றங்களை செய்ய வேண்டிய அரசோ செய்ய முடியாமல் தவிக்கும் நிலை உண்டாகும், மக்களை பாதுகாக்க முடியாமல் தடுமாறும்.

மத்திய அரசின் தேசிய செயல்பாடுகள் தமிழகத்தில் மேலும் மேலும் நெருக்கடியை உண்டாக்கி தவிப்பான நிலையை உண்டாக்கும். மக்களெல்லாம் வாக்குரிமையின் வல்லமையை உணர்ந்து புனிதமான வழியில் நடந்து தெளிவான முடிவிற்கு வருவார்கள்.

அரசு செயல்படுத்தும் நலத்திட்டங்கள் தேவையான கலத்தில் நடைமுறைக்கு வராமல் போனால் தடைகள் உண்டானால் அத்தகைய குறைகளை அரசின் குறையாக இழிவாக மக்கள் எண்ணி எதிர்க்கும் நிலை உருவாகும். மக்கள் அறிவு முதிர்ச்சியுடன் நடந்து அரசினை கேள்விகள் கேட்க துவங்குவார்கள்.

நாட்டின் வளர்ச்சிக்கான பணிகள் கட்டாயம் நடக்காவிட்டால் இனி அறிவுள்ளோர்கள் மூலமாக நாட்டின் நலம் கருதி அரசினை கேள்விகள் கேட்கவும் போராட்டங்கள் நடத்திடவும் கூடிய சூழ்நிலை உருவாகிடும்.

ஆதலால் அரசின் செயல்பாடுகளில் இனியும் குறைபாடுகள் நடந்திடுமாயின் ஆட்சி செய்யும் அரசிற்கு ஈடுகட்ட முடியாத வகையில் அதன் ஸ்திர தன்மை குறைந்து போய் அரசிற்கு இடர்களும் பின்னடைவும் உண்டாகும்.

அடிப்படை கொள்கைகளையும் மறந்து கண்ணியம் அற்ற சூழ்நிலையில் நடந்து கண்ணியமான செயல்பாடுகளை செய்யாமல் கண்ணியக் குறைவாய் நடந்து கொள்ளும் அரசியலை நடத்துபவர்கள் இனி வருங்காலங்களில் மக்களின் நம்பிக்கையை இழந்து முடங்கிவிட நேரும்.

ஆதலினாலே இனி நிர்வாகம் செய்பவர்கள் தர்மத்தின் வழியினில் சென்றால்தான் தம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும். எனவே அரசியலில் உள்ளோர், பொறுப்பில் உள்ளவர்கள் ஆன்மீக அரசியலை நடத்திட நன்மை பெறுவார்கள், தருமங்கள் செய்து தருமத்தின் காவலனாக உள்ள ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உண்மை ஆன்மீக அரசியல் தர்ம வழியினை தயவே வடிவான ஞானவழிதனை ஏற்று தன்னலம் கருதாது பொதுநலமாய் நடந்து கொண்டால், தயவு வழி தர்ம அரசியலை நடத்தினால் இந்தியாவும், தமிழகமும் உலகினில் ஆட்சியில் சிறந்த நாடுகளாக ஆகி உலகின் முதன்மை தேசங்களாக மாறிடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–